பெரிய தபாற் கந்தோரில் புதினப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது

# ஸ்ரீ லங்கா

தகவற்பகுதியின் வாராந்தப் பத்திரிகை

மலர்: 7 | 1963, மே 9 ந் திகதி | இதழ்: 7

# விசாக விழா



புத்தர்பிரான் இப்பூவுலகில் அவதரித்ததினம் பௌர்ணிமைத் தினமாகும். அவர் ஞானோப தேசம் பெற்ற தினம் பௌர்ணிமைத்தினமாகும். அவர் நிர்வாண தசை அடைந்ததினமும் பௌர்ணிமைத்தினமாகும். ஆகவே மும்மையானும் சிறந்து விளங்குவது பௌர்ணிமைத் தினமாகும். இதனுற்றுன் வைகாசி மாசத்து விசாக நட்சத்திரம் பௌத்தர்களுக்கு மிகவும் முக்கிய தினமாகக் கருதப்பட்டு வருகின்றது. இலங்கையில் விசாகதினம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது. பகலில் பௌத்தர்கள் பஞ்சசீலம் அனுஷ்டித்து பௌத்த விகாரைகளுக்குச் செல்வார்கள். இத்தினத்தில் பல வகைப்பட்ட அலங்காரப் பந்தல்கள் ஊர்களின் பல்வேறு இடங்களில் அமைக்கப்படும். இவற்றில் புத்தர்பிரானின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் நிகழ்ச்சிகள் வரையப் பட்டிருக்கும். பந்தல்கள் மின் விளக்குகளினுல் அலங்கரிக்கப் பெற்றிருக்கும்.

பௌத்த யாத்திரிகர்களுக்கு இலவசமான அன்னதானம் வழங்குவதற்கு தற்காலிகமாக சத்திரங்கள் அமைக்கப்படும். பல பந்தல்களில் தாகசாந்தி அளிப்பதற்காக இளநீர், மோர், சோடா முதலிய பானங்களும் இலவசமாக வழங்கப்படும். சில பந்தல்களில் நாடகங்களும் நடித்துக் காட்டப்படும். சிலபந்தல்களில் பாவைக்கூத்தும் நடைபெறும். இசைத்தட்டுச் சங்கீதமும் சில பந்தல்களில் இடம் பெறும். புத்த ஜாதகக் கதைகளும் சில இடங்களில் நடித்துக் காட்டப்படும். பௌத்த குருமாருக்கு தானம் வழங்குவதும் சாதாரணமாக நிகழும். இவ்வாறு விசாக பௌர்ணிமைத் தினத்தை புனித தினமாகக் கருதி தருமஞ் செய்வதிலும் பஞ்சசீலம் அநுட்டிப்பதிலும் காலத்தைப் பயன் படுத்துவார்கள். இவ்வாறு வருடந்தோறும் விசாக தினத்தை புனித தினமாகப் பௌத்தர்கள் அனுட்டித்து வருகின்றுர்கள். இலங்கை அரசாங்கமும் விசாக தினத்தை விடுமுறைத் தினமாக்கியுள்ளது.

# புத்த மதமும் வழிபாடும்

பேராசிரியர் ஜி. பி. மலலசேகர

"பௌத்தர்கள் வழிபடுவதுண்டா? அவர்கள் ஆலயத்துக்குப் போய் என்ன செய்வார்கள்? வழிபாட்டையிட்டு பௌத்தம் கொண்டுள்ள கருத்தென்ன?" என்றெல்லாம் என்னைப் பலர் சில சமயங்களில் கேட்டுள்ளார்கள்.

இக் கேள்விகளுக்கு இந்தக் கட்டுரை மூலம் பதிலளிக்க முயல்கிறேன். "வழிபாடு" என்ற பதத்திற்குப் பல கருத்துக்கள் உள. கடவுள் சர்வ வியாபகராகவும், சர்வ வல்லவராகவும், சர்வ ஞானியாகவும் இருக்கிறார் என்பதில் நம்பிக்கை கொண்ட மதத்தினைச் சார்ந்தவர்கள் வழிபாடு செய்வதென்றால் அதன் அர்த்தம், இறைவனை மன்றாடித் தமக்கு இன்பம், சுகம், செல்வம், பாதுகாப்பு, பாவமன்னிப்பு, பலம், துணையாவும், தரவேண்டுமென வேண்டிக்கொள்வதேயாகும்.

பௌத்தர்களுக்கு அப்படியான ஒரு தெய்வத்தில் நம்பிக்கை இல்லாததினால் மேற்காட்டியாறு அவர்கள் வழிபடுவதில்லை என்பதை முதலிலேயே குறிப்பிட்டுவிடுகிறேன். பௌத்தர்கள் "கர்மம்" என்ற கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டவர்கள். இக் கோட்பாட்டின்படி, இன்பமும், துன்பமும், சுகமும், துக்கமும், அவரவரின் சொல், செயல், சிந்தனை முதலியவற்றிற்கு ஏற்றவாறே பரிணமிக்கின்றன. இவ்விதி அனுத்மீகமானதால், அதற்குக் கருணையோ, மன்னிக்கும் பண்போ கிடையாது. தீமையை நன்மை ஒன்றுதான் அழிக்கவும் முடியும்; அகற்றவும் முடியும். பௌத்த கொள்கையின்படி பாவம் என்பது கடவுளால் விதிக்கப்பட்ட நியமங்களை மீறுவது அல்லது அலட்சியம் செய்வது என்பதல்ல. உடல், உள்ளம், உச்சரிப்பு முதலானவற்றின் மூலம் தவறுகளைப் புரிந்து அதன் மூலம் ஒருவனின் சீலத்தையும் பான்மையையும் மாசுபடுத்திக் கொள்வதையே பாவம் என்று பௌத்தர்கள் கருதுகிறார்கள். சாதாரணமாகக் கொள்ளும் பொருளில் "வழிபாடு" செய்வதற்கு பௌத்தத்தில் இடம் இல்லை. மக்களின் இன்ப துன்பதத்திற்கும் சுகதுக்கத்திற்கும் அவர்களேதான் பொறுப்பாளியாக இருக்கிறார்களே தவிர மற்றவர்கள் அல்ல.

பௌத்தர்கள் ஆலயத்திற்குப் போய் என்ன செய்கின்றார்கள்? அவர்கள் பலவற்றைச் செய்கிறார்கள். நாம் இப்போது ஒரு பௌத்த பக்தனைப் பின்தொடர்ந்து ஆலயத்திற்குச் செல்வோம். சிலவேளை அங்கு நாம், அவன் அனுஷ்டிக்கும் முறைகளின் முக்கியத்துவத்தைத் தெரிந்து கொள்ளலாம். குறிப்பிட்ட நாட்களிற்தான் கோயிலுக்குப் போகவேண்டும் என்பதல்ல. ஒருவன் விரும்பினால் எந்நேரமும் போகலாம். ஆனால், பூரணை தினத்தையும், அமாவாசை தினத்தையும், பௌத்தர்கள் விசேஷ நாட்களாகக் கொண்டாடுகிறார்கள். வெண்மை நிறம் தூய்மையையும், எளிமையையும், அடக்கத்தையும் பிரதிபலிப்பதனால் பக்தர்கள் வெள்ளை உடை அணிந்து கொண்டு ஆலயத்திற்குச் செல்கிறார்கள். பக்தன் ஒருவன், வாசனையும் வண்ணமும் நிறைந்த மலர்கள், எண்ணெய், சாம்பிராணி, கற்பூரம், சந்தனபஸ்பம் முதலியனவற்றை எடுத்துச் செல்கிறான். கோயில் அருகே வந்ததும் அவன் கை, கால்களை அலம்பிக்கொள்கிறான். ஏனெனில் எக்காரியம் செய்யுமுன்னும் உடலும், உள்ளமும் பரிசுத்தமாக இருப்பது அவசியமாகிறது. கோவிலிலே பூஜிப்பதற்குப் பல ஸ்தூபங்கள் இருக்கின்றன. வழிபாட்டிற்கு முக்கியமான இடம் "விஹாரை". "விஹாரை" என்பதன் பொருள், வதியும் இடம் என்பதாகும். ஆலயங்களில் காணப்படும் கட்டடங்களைக் குறிக்கும் பதங்கள் சம்பந்தமாக மாறுபட்ட கருத்துக்கள் தோன்றுவதனால், அவற்றை இங்கு சற்று விளக்குவது அவசியமாகிறது.

"விஹாரை" என்ற சொல் ஆதியில் புத்தர் வதிந்த இடத்தையே குறித்தது. பின்னர் இச்சொல் பிக்குகள் வசிக்கும் இடத்தைக் குறிக்கவும் அடிக்கடி பிரயோகிக்கப்பட்டது. உதாரணமாக, அனுராதபுரத்தில் இருக்கும் மஹா விஹாரை மேற்சொன்ன பொருளுக்கேற்பவே உள்ளது. இன்னொருவகையில் சொன்னால் மடாலயத்தையே "விஹாரை" எனக் குறிப்பிட்டார்கள். ஆனால் இந்நாட்களில் பிக்குமார் வசிக்கும் இடத்தை "பங்சல" என்கிறோம். "பங்சல்" என்ற வார்த்தை ஆதியில் தபோமுனி, சந்நியாசி போன்றவர்களின் குடிசையைக் குறித்தது. ஆதியில் உபயோகித்த வார்த்தையை விடுத்து, இப்போது அதனை "விஹாரை" என்று அழைக்கிறோம். இதிலே ஒரு விசேஷம் அடங்கியிருக்கிறது. பௌத்தர்கள் உருவத்தை வழிபடுவதில்லை. உருவம் புத்தரை ஞாபகப்படுத்திக் கொள்வதற்கும் அவரைக் கற்பனைக் கண்ணெதிரே கொண்டு வரவும் உதவும் சின்னமாக மாத்திரம் இருக்கிறது. வழிபாட்டைப் பொறுத்த வரையில் உருவம் ஒன்று இருந்தாலும் ஒன்றே; இல்லாவிட்டாலும் ஒன்றே. ஆனால், ஒருவன் தனது சிந்தனைகளை ஒருமுகப்படுத்துவதற்கு உருவவழிபாடு பெரிதும் உதவுகிறது. எனவே, பௌத்தர்கள் சிலையைத்தான் வணங்குகிறார்கள் என்று கூறுவது அபத்தமாகும்.

"விஹாரை" என்ற பதப்பிரயோகத்தில் இன்னுமொரு ரசமான அம்சம் அடங்கியுள்ளது. விஹாரை என்பதன் கருத்து, வதியும் இடம் என முன்னரே கூறியுள்ளோம். எனவே, விஹாரையில் புத்தர் வதிந்தார்; வதிகிறார் என்றே புத்த மதத்தவர்கள் கொள்கிறார்கள். பௌத்த பக்தன், இறந்தொழிந்து மறைந்துபோன ஒருவருக்கு வழிபாடு செய்யவில்லை. தனக்குப் பிரத்தியட்சமாக உயிருடன் இருப்பவரையே அவன் வழிபாடு செய்கிறான். இதன் அர்த்தம், ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் குசிநார என்ற இடத்தில் இறந்துபோன புத்தர் இன்னும் ஓரிடத்தில் உயிருடன் இருக்கிறார் என்பதில் நம்பிக்கை கொண்டு பௌத்தர்கள் வழிபாடு செய்கிறார்கள் என்பதல்ல. புத்தருக்குத் தங்கள் அஞ்சலியை செலுத்தும் பௌத்தர்கள், அவர் தம் முன்னே உயிருடன் இருக்கிறார் என்ற எண்ணத்தை உண்டாக்கிக்கொள்வதனால் அவர்களின் வழிபாடு உத்வேகத்தையும் சக்தியையும் பெறுகிறது. புத்தர் மறைந்து விட்டார். எனினும் அவரின் ஒப்பற்ற செல்வாக்கு இன்றும் நிலைத்திருக்கிறது; உலகனைத்தும் பரவியிருக்கிறது. நறுமணத்தைப் பரப்பிக் கொண்டிருந்த மலர் அழிந்து விட்டாலும் அதன் மணம் அழியவில்லை. பௌத்த பக்தன், புத்தர் மறையவில்லை என்றும், அதனால் புத்தரின் போதனைகள் மறையவில்லை எனவும் மனதில் எண்ணிக்கொண்டு பூஜிக்கிறான். அவன் கோயிலில் உணவு, பானங்களை அர்ச்சிப்பதற்கும் இதுவே காரணம். இவையாவும் அவனின் பக்தி, விசுவாசம் போன்றவற்றின் அடையாளமாகக் கொடுக்கப்படுகின்றன. தவிர, புத்த மதத்தைப் பற்றி அதிகம் அறியாத பௌத்தன் கூட, கோயிலில் கொடுக்கப்படும் நைவேத்தியங்களை புத்தர் எடுத்துக் கொள்கிறார் என்று நம்புவதில்லை. எனினும், அவர்களின் வாழ்க்கையில் புத்தரின் செல்வாக்கு உயிர்த்து நிற்கிறது என்பதைக் காட்டுவதற்கு இது ஒரு சாதனமாக இருக்கிறது.

வழிபடுதல், அஞ்சலி செய்தல், போற்றுதல் போன்றவற்றின் ஒரு அம்சமாகவே மலர்கள் அர்ப்பணஞ் செய்யப்படுகின்றனவே தவிர, அவற்றிற்கு மாத்திரம் ஒரு தனி மகிமை உண்டென்பதற்காக அல்ல. நாம் பூமாலை அணிவிப்பதன் மூலம் எப்படி ஒருவர் மீது நாம் கொண்டுள்ள மரியாதை, மதிப்பு, அன்பு, நன்றி முதலியவற்றைக் காட்டுகிறோமோ அப்படியே மலர்களை அர்ப்பணிப்பதன் மூலம் புத்தரையும் போற்றுகிறோம். இதைப் போன்றே திருப்பாக்களைப் பாடுவதன் மூலமும் பக்தன் புத்தரின் உன்னத பண்புகளை ஞாபகப்படுத்திக் கொள்கிறான்.

புத்தர் துன்பத்திற்கும் துயரத்திற்கும் ஒரு முடிவு கண்டவர். அவர் எமது அஞ்சலியைப் பெறத் தகுந்தவர்; பூரணத்துவம் வாய்ந்தவர். மெஞ்ஞானத்தை உணர்ந்து, பரிநிர்வாணம் எய்தியவர். நல்லறிவு, நல்லொழுக்கம் முதலானவற்றிற்கான பாதையை வகுத்தவர். சாந்தியையும் சந்துஷ்டியையும் கண்டறிந்தவர். உலகின் உண்மை இயல்பை உணர்ந்தவர். அவர் ஓர் ஒப்பற்ற வழிகாட்டி. அவரின் துணையை நாடியவர்களுக்கு அவர் ஒரு சிறந்த நண்பர். அவர் தேவருக்கும் மனிதருக்கும் ஒரு குரு.

பௌத்தர்கள் தமக்கு அனுகூலங்களையோ, பாதுகாப்பையோ அளிக்க வேண்டுமெனத் தொழுவதில்லை. அவர்கள் புத்தரின் பண்புகளை ஞாபகந்தான் பண்ணிக் கொள்ளுகிறார்கள். அவற்றை நடைமுறையில் காட்டவும் முனைகிறார்கள். உலகில் வாழ்ந்தவர்களிலே புத்தரே மிகப் சிறந்த மகான் என பௌத்தர்கள் போற்றுகிறார்கள்.

பௌத்தன் ஒருவன் புத்தபெருமானைத் தனது குருவாகவும், வழிகாட்டியாகவும் ஏற்றுக்கொண்டதாக பக்திப் பாக்களில் பாடுகிறான். இதன் மூலம் அவன் புத்தரில் கொண்டுள்ள நம்பிக்கையையும், வாழ்விற்கு அவர் வகுத்த வழியை ஒப்புக்கொண்டமையையும் தெரிவித்துக்கொள்ளுகிறான். புத்தர், சீலானுஷ்டானத்தினாலும், ஞான சக்தியினாலும் அடைந்த நிர்வாணத் தசையைத் தானும் அடைய முயல்வதாக பக்தன் பிரதிக்ஞை செய்து கொள்கிறான். வைராக்கிய சித்தம் உள்ளவர்களும், புத்த நிலைக்குரிய மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள் எவரும் புத்தர்களாகலாம். மற்றவர்கள் அடைய முடியாத உன்னத நிலையை புத்தர் அடைந்து விடவில்லை.

புத்தர் உபதேசித்த போதனைகளையே தர்மம் என்று குறிப்பிடுகிறார்கள். இத் தர்மம் மர்மம் உடையதாகவோ, இரகசியங்கள் கொண்டதாகவோ இல்லை. தெளிவான கருத்துக்களையும் மறுத்தற்கரிய நியாயங்களையும் அதிலே காணலாம். அதன் குறிக்கோள் நிரந்தரமானது. அதாவது துன்பத்தைத் துடைப்பதும், இன்பம் சாந்தி முதலியனவற்றை எய்துவதுமாகும். இன்பத்தையும் சாந்தியையும் அவரவர் சுயமுயற்சியினால்தான் எய்தலாமேயொழிய, மற்றவர்களின் உதவியினால் அடைய முடியாதென்றும் தர்மம் கூறுகிறது.

("பௌத்தன்" என்ற சஞ்சிகையில் இருந்து எடுக்கப்பட்டது).

### மனம்

மனிதனை மனோதர்மமே உருவாக்குகின்றது. சிந்தனைகளே அதன் அடிப்படை, சிந்தனைகளாலேயே அது ஆக்கப்படுகிறது. மனிதன் தீய எண்ணத்தோடு பேசினாலும், செயல் புரிந்தாலும் வண்டிச் சக்கரம் மாட்டைத் தொடர்ந்து செல்வதுபோல் துக்கம் அவனைத் தொடர்ந்து செல்லும்.

2

மனிதனை மனோதர்மமே உருவாக்குகின்றது. சிந்தனைகளே அதன் அடிப்படை, சிந்தனைகளாலேயே அது ஆக்கப்படுகின்றது. மனிதன் நல்லெண்ணத்துடன் பேசினாலும், செயல் புரிந்தாலும் நிழல் தொடர்ந்து செல்வதுபோல், இன்பம் அவனைத் தொடர்ந்து செல்லும்.

3

புலன்களை அடக்காமல், உணவில் நிதானமில்லாமல் மடிமையில் சூழ்ந்து, வீரியம் குறைந்து, இன்பங்களுக்காகவே வாழ்ந்து வருவோனை, வலியற்ற மரத்தைக் காற்று வீழ்த்துவதுபோல் மாரன் முறியடிக்கிறான்.

(பௌத்த மதத்தில் மாரன் என்னும் சொல் சன்மார்க்க விரோதியான சைத்தானைப் போன்ற ஒரு சக்தியைக் குறிக்கிறது. மன்மதனை அல்ல).

4

புலனடக்கத்தோடு நிதான உணவுடனும், நல்லறத்திலேயே நாட்டத்துடனும் நிறைந்த வீரியத்துடனும், இன்பங்களை எதிர்பாராமல் வாழ்ந்து வருவோனைப் பாறைகள் நிறைந்த மலையைச் சுருவளி அசைக்க முடியாததுபோல் மாரன் வெல்லமுடியாது.

5

கூரை செம்மையாக வேயப்படாத வீட்டினுள் மழை நீர் பாய்வது போல் நன்னெறிப்பயிற்சியில்லாத மனத்தினுள் ஆசைகள் புகுந்து விடுகின்றன.

6

கூரை செம்மையாக வேயப்பட்ட வீட்டினுள் மழை நீர் இறங்காதது போல், நன்னெறிப்பயிற்சியுள்ள மனத்தினுள் ஆசைகள் நுழைய முடியா.

7

சாத்திரங்கள் அனைத்தையும் கற்று ஒப்பித்தாலும் வாழ்க்கையில் அவற்றின்படி நடக்காதவன் ஊரார் பசுக்களைக் கணக்கிட்டு எண்ணும் ஆயனைப் போன்றவன். சமய வாழ்வில் சிரமணன் அடைய வேண்டிய பயனைப் பெற முடியாது. (சிரமணன்–சிரத்தையோடு பௌத்த தருமத்தைப் பின்பற்றுபவன். துறவி).

8

சாத்திரங்கள் சிலவற்றையே கற்றவனுயினும் வாழ்க்கையில் அவற்றின்படி நடப்பவனும், ஆசை, துவேஷம், மோகம் முதலியவற்றைக் களைந்து மெய்யறிவும் தெளிந்த சித்தமும் பெற்று இவ்வுலகிலும் பரத்திலும் உலக ஆசைகளிலிருந்து நீங்கப்பெற்றவனும் உள்ளவனே சிரமணன் அடையவேண்டிய பயனைப் பெறுவான்.

# தம்மபதம்

### முயற்சி

அறிவாளி விடாமுயற்சியால் மடிமையை விரட்டிவிட்டு ஞானமாகிய கோபுரத்தில் ஏறிச் சோகமற்ற நிலையில் இருந்து கொண்டு, கீழே சோகத்தில் ஆழ்ந்துள்ள மக்களைக் காண்கிறான் மலைமேலிருந்து கீழே சமவெளியைப் பார்ப்பது போல் அவன் மற்றையோரைப் பார்க்கின்றான்.

10

அறிவாளி மடிமையில் சூழ்ந்தவர் நடுவே முயற்சியுடையோனாகவும், உறங்குவோர் நடுவே விழிப்புள்ளவனாகவும் இருப்பான்; பந்தயக் குதிரை வாடகைக் குதிரையைப் பிந்தவிட்டு முன்னேறிப் பாய்வதுபோல, அவன் மற்ற யாவர்க்கும் முன்னால் செல்கிறான்.

11

இந்திரன் கருத்துடைமையால் தேவர்களின் அதிபதியாகி உயர்ந்தான். மக்கள் கருத்துடைமையைப் போற்றிப் புகழ்கின்றனர். கருத்தில்லாமை எப்பொழுதும் இகழப்படுகிறது.

12

மடிமையைக் கண்டு அஞ்சி, கருத்துடைமையில் களிப்படையும் பிக்கு உள்ளத்தைப் பிணிக்கும் சிறிய, பெரிய தளைகளையெல்லாம் அனலைப்போல் எரித்துக் கொண்டு செல்கிறான்.

**புத்தமதத்தின் சிறந்த நூல்களில் "தம்மபதம்" தலையாயது. இதுபாளி மொழியில் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் இன்று உலகின் பலமொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டு, உலக அறிஞர்களால் உச்சி மேல்வைத்துப் போற்றப்படுகிறது. இத் தம்மபதத்தில் 423 சூத்திரங்கள் உண்டு. அவற்றில் சிலவற்றை இங்கு நாம் வெளியிடுகின்றோம்.**

### சிந்தனை

காப்பதற்கும் அடக்குதற்கும் அரிதான சபல சித்தத்தை அறிவாளி, வேடன் தன் அம்பை நிமிர்த்துவதுபோல் நேராக்குகிறான்.

14

நெடுந்தூரம் தனியே சஞ்சரிப்பதாயும் உருவமற்றதாயும் இதயக் குகையுள் அமர்ந்துள்ள சித்தத்தை அடக்கியாள்வர், மாரன் பிடியிலிருந்து விடுபட்டவராவர்.

15

உடல் மட்கலம்போல் உடைவதாக உள்ளதையறிந்து ஒருவன் தன் சித்தத்தைக் கோட்டைபோல் அரண்செய்து, அறிவு என்னும் ஆயுதத்தால் மாரனை எதிர்த்துத் தாக்கவேண்டும். வென்று பின்னும் அவனிடம் கவனமாயிருந்து வென்றதைக் காக்க வேண்டும்.

### நல்ல மனிதன்

புஷ்பத்தின் வாசனை காற்றை எதிர்த்து வீசாது. சந்தனம், தகரம், மல்லிகை முதலிய எல்லா மலர்களின் மணமும் அப்படித்தான். ஆனால் நன்மக்களின் புகழ் மணம் காற்றையும் எதிர்த்து வீசுகிறது. நல்ல மனிதனின் புகழ் நாலு திசையிலும் பரவுகிறது.

17

சந்தனம், தகரம், தாமரை, ஜவந்தி ஆகிய புஷ்பங்களின் நறுமணம் நற்குணத்தின் நறுமணத்திற்கு ஈடாகாது.

18

தகரம் அல்லது சந்தனத்தின் வாசனை அற்பமானது; நற்குணமுடையவர்களின் உத்தமமான உயர் மணம் தேவர்களிடத்தும் சென்று வீசுகிறது.



பொல்லநறுவை கல் விஹாரையில் புத்தரின் உருவச்சிலை

## சீனி போதிய அளவு உண்டு

"1963 ஆம் ஆண்டு மே மாதம் 2 ந் திகதியிலிருந்து மொத்த வியாபாரிகள் அனைவருக்கும் அவர்களது முழு கோட்டா சீனியும் வழங்கப்பட்டு வருவதால் கூட்டுறவுப் பண்டசாலைகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் சீனி வழங்குவதில் எவ்வித கட்டுப்பாடும் இருக்க வேண்டிய அவசியமில்லை. உள்ளூரிலுள்ள பாவனையாளர்களின் வழமையான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு சகல பிரதேசங்களிலும் போதுமான அளவு சீனி கையிருப்பில் இருக்கவேண்டும். சீனியைப் பதுக்கி வைத்திருப்போர், கள்ள மார்கட்டில் விற்பனை செய்வோர் ஆகியோரைப்பற்றித் தங்கள் மாவட்டங்களிலுள்ள பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வருமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்". இவ்வாறு வர்த்தக, வியாபார, உணவு, கப்பல் போக்குவரத்து அமைச்சு வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்தியொன்று கூறுகிறது.

"10,000 தொன் சீனியை ஏற்றிவந்த கப்பலொன்று நேற்று இங்கு வந்து சேர்ந்து இன்று சீனி கப்பலிலிருந்து இறக்கப்படுகிறது. மேலும் 7,000 தொன் சீனியை ஏற்றிவரும் கலமொன்றும் இன்னுமொரு வார காலத்தில் எதிர்பார்க்கப்படுகிறது" என்றும் 2.5.63 ல் வெளியான அச்செய்தி கூறுகிறது.

# இலங்கை வானெலி நிகழ்ச்சிகள்

12.5.63 தொடக்கம் 14.5.63 வரை

## தேசீய ஒலிபரப்பு

**ஞாயிறு**
**மே 12**

காலை

6.45 பாமாலை
6.55 கத்தோலிக்க நற்சிந்தனை—வண. பிதா. மார்க்கஸ் பெர்னுண்டோ
7.00 செய்திகள்
7.10 அறிவிப்புகள்
7.15 தேர்ந்த இசை
7.45 திரை இசை †
8.15 தமிழ் மூலம் சிங்களம்
8.30 **ஞானஞ்சலி—** (மறு ஒலிரப்பு)
9.00 இஸ்லாமிய சமயப் பாடசாலை—நடத்துபவர் : இலட். எல். எம். முஹம்மத்
9.30 **கிறிஸ்தவ நிகழ்ச்சி—**
10.00 ஒலிபரப்பு முடிவு
11.30 சிறுவர் மலர்— தாயரிப்பு வானெலி மாமா
12.15 நேயர் விருப்பம் †
12.45 செய்திகள்
12.55 அறிவிப்புகள்
1.00 **மாதர் பகுதி—**
1. குழந்தைகளும் பெற்ரேரும்—பேச்சு ஷாஜஹானி புஹாரி
2. சிறுகதை நாடகம்
1.30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5.00 **சிறுவர் பகுதி—** பிறந்ததின வாழ்த்துக்கள்
5.15 பாட்டு ‡
5.45 திரைக்குரல்
6.00 செய்திகள்
6.10 வாத்ய இசை
6.30 பாட்டு— எஸ். எம். மூத்ததம்பி
7.00 மாதர் கேட்டவை
7.30 பாட்டு—சத்யதேவி மஹேந்திரன்
8.00 **முஸலிம் நிகழ்ச்சி—**மணிமொழிகள் ஜெய்யித் பல்லுள்ளாஹ் மவுலானு
8.15 மாணவர் மன்றம்—புழுதி வயல் அரசினர் முஸ்லிம் பாடசாலை
8.30 நேயர் கேட்டவை †
9.00 செய்திகள்
9.10 அறிவிப்புகள்
9.15 நாடகம்—" சாந்தி "—கே. அருளானந்தம் எழுதியது
9.45 நிலைய ஒலிப்பதிவுகள்
10.30 ஒலிபரப்பு முடிவு

**திங்கள்**
**மே 13**

காலை

6.45 பாமாலை ‡
6.55 கத்தோலிக்க நற்சிந்தனை—வண. பிதா. மார்க்கஸ் பெர்னுண்டோ
7.00 செய்திகள்
7.10 அறிவிப்புகள்
7.15 மூவர் இசை†
7.45 திரை இசை
8.15 இஸ்லாமிய கீதம்
8.30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12.00 சித்ரகானம் †
12.45 செய்திகள்
12.55 அறிவிப்புகள்
1.00 கதம்ப இசை†
1.30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5.00 **சிறுவர் பகுதி—**பிறந்த தின வாழ்த்துக்கள்
5.15 நிலைய ஒலிப்பதிவுகள்
5.45 திரை இசை
6.00 செய்திகள்
6.10 விலைவாசிகள்
6.15 **கிராம சஞ்சிகை—**தேச வளம், சாரணர் நிகழ்ச்சி
6.45 வயலின்
7.00 நேயர் விருப்பம்
7.30 வீணை—மஹேஸ்வரி அப்பாத்துரை
8.00 **முஸ்லிம் நிகழ்ச்சி—**உறுதுப் பாடல்கள் †
8.30 செய்தித் தொகுப்பு—
8.45 பாட்டு—முஹம்மத் ஷாபி
9.00 செய்திகள்
9.10 அறிவிப்புகள்
9.15 தமிழ் மூலம் சிங்களம் மறு ஒலிபரப்பு
9.30 கோஷ்டிகானம்
9.15 பாட்டு—மீனு வெங்கடேஸ்வரன்
10.30 ஒலிபரப்பு முடிவு

**செவ்வாய்**
**மே 14**

காலை

6.45 உதயகீதம் ‡
6.50 சைவ நற்சிந்தனை—மீனுட்சி பொன்னுத்துரை
6.55 இஸ்லாமிய நற்சிந்தனை—எஸ். ஐ. வை. மவுலானு
7.00 செய்திகள்
7.10 அறிவிப்புகள்
7.15 தேர்ந்த இசை
7.45 திரை இசை
8.15 இஸ்லாமிய கீதம் †
8.30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12.00 சித்ரகானம் †
12.45 செய்திகள்
12.55 அறிவிப்புகள்
1.00 கதம்ப இசை†
1.30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5.00 **சிறுவர் பகுதி—**பிறந்த தின வாழ்த்துக்கள்
5.15 வளரும் பயிர்
5.45 திரை இசை†
6.00 செய்திகள்
6.10 விலைவாசிகள்
6.15 **கிராம சஞ்சிகை—**உணவுப் பெருக்கம் தேச வளம்
6.45 புல்லாங்குழல்
7.00 நேயர் விருப்பம்
7.30 இருபது கேள்விகள்—23 தயாரித்து நடத்துபவர் : " சானு "
8.00 **முஸ்லிம் நிகழ்ச்சி—**நேயர் கேட்டவை† நிலைய ஒலிப்பதிவுகள்
8.30 பேச்சு—" ஹஸரத் கதிஜாநாயகி "—செல்வி ஏ. பர்தா பாரூக்
8.45 பாட்டு—ஏ. ஆர். எம். இப்ருஹீம்
9.00 செய்திகள்
9.10 அறிவிப்புகள்
9.15 திசை கடந்த இசை—
9.45 நாகசுரம்—பி. கந்தசாமி சகோதரர்கள்
10.30 ஒலிபரப்பு முடிவு

† இசைத்தட்டு
‡ நிலைய ஒலிப்பதிவுகள்

# நெல், மீன் உற்பத்தி அதிகரிப்பு

1962 ஆம் ஆண்டில் ஏற்பட்டுள்ள இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பரிசீலனை செய்த இலங்கை மத்திய வங்கி, நெல் உற்பத்தியும், மீன்பிடியும் அதிகரித்துள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளது. தேசீய உற்பத்திப் பெருக்கத்தை அதிகரிப்பதற்கு இவை பெரிதும் உதவியுள்ளன.

தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்கள், போன்ற முக்கிய உற்பத்திகளும் அதிகரித்துள்ளதாக வங்கியின் அறிக்கை கூறுகிறது.

நெல் உற்பத்தி, மீன்பிடி ஆகியவற்றைக் காணி, விவசாய, அமைச்சே கண்காணித்து வரும் சமயத்தில், தேயிலை, றப்பர், தென்னை புனர் நடுகைத் திட்டங்களையும் அதுவே கவனித்து வருகிறது. தோட்டப் பிரதேசங்களில் இத்தகைய உற்பத்திகள் அதிகரித்ததற்குப் புனர் நடுகைத் திட்டங்களும் ஒரு காரணம்.

1962 இல் நாட்டின் உள்நாட்டுத்துறையில் ஏற்பட்ட பொருளாதார நிதிப்போக்குகளை அறிக்கை " ஆராய்கையில் " 1962 இல் உண்மையான உற்பத்தி கணிசமான அளவு அதிகரித்துள்ளது. நெல் உற்பத்தி 50 லட்சம் புசல்களினுல் அல்லது முன்னைய வருடத்திலும் பார்க்க 11 சத வீதத்தினுல் அதிகரித்துள்ளது. 1961 ஆம் ஆண்டிலேயே அதிகரிதிருந்த மீன்பிடி 1962 ஆம் ஆண்டில் மேலும் உயர்ந்தது.

உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ், 1962 ம் ஆண்டில் சுமார் இரண்டு கோடி ஐம்பது லட்சம் புசல் நெல் வாங்கப்பட்டது. 1961 ஆம் ஆண்டிலோ ஒரு கோடி அறுபது லட்சம் புசல்களே வாங்கப்பட்டன.

நெல் உற்பத்தியை அரிசியின்படி பார்த்தால், 1962 இல் 6,24,900 தொன்னும், 1961 இல் 5,61,600 தொன்னும் உற்பத்தியாகியுள்ளன. உள்நாட்டிலேயே உபயோகிக்கப்பட்ட அரிசியின் அளவு சுமார் 11,03,300 தொன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதே வருஷத்தில் 4,04,173 தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

1961 ஆம் ஆண்டில் 5,87,401 ஏக்கர் நிலத்திலேயே தேயிலை செய்கை பண்ணப்பட்டிருந்தது. 1962 ஆம் ஆண்டில் இப்பரப்பு 5,92,118 ஏக்கராக அதிகரித்தது. 61 ஆம் ஆண்டில் 45 லட்சத்து 50 ஆயிரம் ருத்தலாக இருந்த தேயிலை உற்பத்தி 62 இல் 46 லட்சத்து 70 ஆயிரம் ருத்தலாக உயர்ந்தது. 62 இல் 1,769 ஏக்கர் நிலத்தில் தேயிலை புனர் நடுகை செய்யப்பட்டது. 61 இல் 1,298 ஏக்கரிலேயே தேயிலை புனர் நடுகை செய்யப்பட்டது.

1962 இல் றப்பர் உற்பத்தி 22 கோடி 90 லட்சம் ருத்தலாக இருந்தது. 1958 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவே ஆகக் கூடிய உற்பத்தி அளவாகும். 1961 இல் 260 கோடி தேங்காய்களாக இருந்தது. 1962 இல் 281 கோடி 10 லட்சம் காய்களாக இருந்தது. 1962 இல் 10,99,290 அந்தர்மீன் பிடிக்கப்பட்டது.

# உள்ளூரில் பொருட்கள் உற்பத்தி

வர்த்தக, உணவு, கப்பற் போக்குவரத்து மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்ன அவர்களின் கட்டளைப் பிரகாரம், கைத்தொழில் துறையுடன், ஏற்றுமதி, இறக்குமதித் துறையிலும் கூட்டுறவுப் பகுதி தனது முயற்சிகளை விஸ்தரித்துள்ளது.

உட்டுளையுள்ள கொங்கிறீற் கட்டிகள், கல்வனைஸ்ட் ஸ்நானத் தொட்டிகள், முட்கம்பி, அலுமினியப் பாத்திரங்கள், கார்பன் பேப்பர், ஸ்ரென்சில், நெருப்புப் பெட்டி, உலோக, மர விளையாட்டுப் பொருட்கள், கம்பிளி, சிமெந்து, செங்கற்கள், ரெருசோ ஓடுகள் முதலிய பொருட்களை உற்பத்தி செய்யக் கோரும் 15 விண்ணப்பங்கள் இதுவரை கூட்டுறவு அபிவிருத்திப் பகுதிக்குக் கிடைத்துள்ளன.

கைத்தொழில் அமைச்சின் கைத்தொழில் அங்கீகாரக் கமிட்டி இந்தக் கைத்தொழில்களை அங்கீகரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

உங்கள் பணத்துக்கு
அதிகம்

கைத்தொழிற் பொருட்காட்சி

**சுவீப்**

**210 பரிசுகள்**

ஒவ்வொரு மாதமும்

1963, பெப்ருவரி மாதம் 14 ந் திகதி
துவக்கம் மாதம் இருமுறை
சீட்டிழுப்பு

**ரிக்கற் ஒன்றை வாங்கி**
**பரிசு ஒன்றைப் பெறுங்கள்**

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ஆர் 9661—5,008 (4/63)